செய்தி வெளியீடு:34 19.1.09

## செய்தி வெளியீடு

## அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி நிலையினை ஆய்வு செய்ய மாநில விலை கண்காணிப்புக் குழு கூட்டம்

## மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களால் நடத்தப்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு இன்றி கிடைப்பதை உறுதி செய்யவும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவும், மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ. வ. வேலு அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட விலைவாசி கண்காணிப்பு குழுவின் முதல் கூட்டம் தலைமைச் செயலகத்தில் இன்று (19.01.2009) காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ. வ. வேலு அவர்கள் கூட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றுகையில், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தி ஏழை எளிய மக்களை பாதுகாக்கும் வகையில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துரைத்தார். ஒரு ரூபாய்க்கு 1 கிலோ அரிசி திட்டம், சிறப்பு பொது விநியோகத் திட்டம், மானியவிலை மளிகை பொருட்கள் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அரிசி, கோதுமை மற்றும் பருப்பு வகைகள் போன்றவைகளை இருப்பு வைத்துக் கொள்வதற்கு மொத்த மற்றும் சில்லறை வணிகர்களுக்கும், அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் உச்சவரம்பு நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. டீசல் மீதான விற்பனை வரியை 2 சதவீதம் குறைக்கப்பட்டது. அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் தமிழகத்தில் விலைவாசி கட்டுக்குள் இருக்கிறது. குறிப்பாக பாமாயில் ஒரு கிலோ ரூ.58/- வெளிச்சந்தையில் விற்கப்பட்டபோது, சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் நியாயவிலைக் கடைகளில் ரூ.40/-க்கு விற்கப்பட்டது. இதன் விளைவாக வெளிச்சந்தை விலை குறைந்து கொண்டே வந்ததனால் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் நியாயவிலைக் கடைகளில் ரூ.40/-க்கு விற்கப்பட்டுவந்த பாமாயில் ரூ.35/- ஆகக் குறைக்கப்பட்டது. வெளிச்சந்தையில் பாமாயில் விலை குறைந்துள்ளதால் மீண்டும் தற்போது ரூ.30/-ஆகக் குறைக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், செப்டம்பர் மாத விலையுடன் ஒப்பிடுகையில் கோதுமை (0.98%), உளுத்தம் பருப்பு (1.01%), கடலைப் பருப்பு(6.20%), தனியா(6.72%), தேங்காய் எண்ணெய்(0.43%), கடலெண்ணெய்(7.17%), சூரியகாந்தி எண்ணெய்(3.70%), பாமாயில்(33.46%), தக்காளி(4.01%) விலை குறைந்துள்ளது.

5.01.2009 முதல் சரக்குந்து வேலைநிறுத்தம் காரணமாக காய்கறிகளின் விலை சற்று உயர்ந்தாலும், தமிழகத்தை பொறுத்தவரை உள்ளூர்

காய்கறிகள் சந்தைக்கு வருவதில் அதிக தடை ஏதும் இல்லாததால் அவற்றின் விலையில் அதிக மாற்றமின்றி இருந்தது. கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், வாழைக்காய், தக்காளி போன்றவற்றின் விலைகள் குறைந்துள்ளன. உருளைக்கிழங்கு உத்தரப்பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசத்திலிருந்து வரத் தொடங்கியுள்ளதால் அவற்றின் மொத்த விலை குறைந்துள்ளது. 12.01.2009 முதல் சரக்குந்துகளின் வேலைநிறுத்தம் திரும்பப் பெறப்பட்டுள்ளதால், காய்கறிகளின் விலை கணிசமாக குறைய வாய்ப்புள்ளது என்பதாலும், புதிய நெல் அறுவடை காரணமாக விரைவில் அரிசி ரகங்களின் விலையும் குறையத் தொடங்கும். பெட்ரோல், டீசல் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளதால், சரக்கு போக்குவரத்து கட்டணம் குறைந்து அத்தியாவசியப் பொருட்களின் விலை வரும் மாதங்களில் கணிசமாக குறைய வாய்ப்புள்ளது. எனவே, ஜனவரி 2009–ன் விலைவாசி நிலவரத்தினை ஆய்வு செய்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்தார்கள். விலைவாசி கடந்த ஆண்டு கணிசமாக அதிகரித்த ஒரு சில உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான திட்டங்களை வகுத்து இவைகளின் உற்பத்தியை கணிசமாக உயர்த்த வேளாண் துறை தேவையான நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., தலைமைச் செயலாளர், திரு. க. சண்முகம், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர், திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப., ஆணையர், உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு.பிரவீன் குமார், இ.ஆ.ப., சிறப்பு செயலாளர், நிதித்துறை, திரு.கே. நந்தகிஷோர், செயலாளர், வேளாண்மைத் துறை, திரு. ஜதீந்த்ரநாத் ஸ்வைன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், திரு. அதுல் ஆனந்த், இ.ஆ.ப., இயக்குநர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், கிண்டி, சென்னை, திருமதி எம். சுசிலா, தனி அலுவலர் (விலை கண்காணிப்புக் குழு), உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு.தி. ஜெயகுமார், பொது மேலாளர், இந்திய உணவுக் கழகம், சென்னை, தன்னார்வ நுகர்வோர் அமைப்பு உறுப்பினர்கள் திரு. டி.ஏ. பிரபாகர், திரு. ரமணி, திரு. தாமஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.